**மஹியங்கனை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

**1. நிதிசார் கூற்றுக்கள்**

**1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 25 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 கணக்காய்வு அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமையத் தயாரிக்கப்பட்டிருந்தன என்றும், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மஹியங்கனை பிரதேச சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 நிகர சொத்துக்களில் குறைவு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுகையில் மீளாய்வாண்டில் நிகர சொத்துக்கள் ரூபா 9,119,099 குறைவடைந்திருந்தன.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதிலான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது 16 வேலைகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 2,400,000 முற்பணமானது கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் கணக்கினதும் முற்பணக் கணக்கினதும் மீதிகள் ஒவ்வொன்றும் முறையே ரூபா 2,400,000 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(இ) 2012 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் தம்பராவ சங்கபோ பிளேஸ் உட்புகு வீதியில் கொங்கிரீட் இடுவதற்கு ரூபா 487,500 கடன்பட்டோர் தொகைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது ரூபா 462,060 பெறப்பட்டிருந்ததால் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதியும் திரண்ட நிதிய மீதியும் ரூபா 25,440 அதிகரித்தவாறு நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) 2002 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின்போது செலுத்தப்பட்ட ரூபா 18,356 கணக்காய்வுக் கட்டணம் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்காய்வுக் கட்டணக் கணக்கில் வரவு வைக்கப்படாது கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு

கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 18,356 கூடுதலாகவும் கடன்கொடுத்தோர் மீதி அதேயளவு தொகையால் குறைத்தும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) 2012 ஆம் ஆண்டிற்கெனக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 45,024 கணக்காய்வக் கட்டணமானது நடப்பாண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டமையால் நடப்பாண்டிற்கான செலவினம் நிதிசார் கூற்றுக்களில் ரூபா 45,024 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்பினது பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(எ) மீளாய்வாண்டினது ஆரம்ப மீதியில் உள்ளடங்கிய ரூபா 96,738 வருவாய் நிலுவையானது கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 16,677,396 ஆவதுடன் அத்தினத்தில் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 16,242,449 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 11,516,721 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவு | உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி தனி நபர்களுக்கும் சனசமூக அமைப்புகளுக்கும் பொருட்களை உதவியாக வழங்குவதற்கு 10 சந்தர்ப்பங்களில் ரூபா 169,950 செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 180 ஆம் விதி | வருவாய்ச் சேகரிப்பு, பணம் அல்லது களஞ்சியத்திற்குப் பொறுப்பாக உள்ள 3 உத்தியோகத்தர்கள் ஊழியர் பிணைப் பணத்தைச் செலுத்தவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) இலங்கை குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| | (i) அத்தியாயம் VII பிரிவு 12:5:1 | சபையினது செயலாளருக்கான பதவியில் பதில் கடமை புரிந்தமைக்காக 2013 ஜனவரி முதல் ஜூன் வரை 6 சந்தர்ப்பங்களில் ரூபா 23,152 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 4 | சபையில் பணியாற்றி சேவை நீங்கிய, ஓய்வு பெற்ற இடமாற்றத்திற்குள்ளான, மரணமடைந்த 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடனாகிய ரூபா 67,775 அறவிடப்பட வில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 288,213 ஆகும். இதற்கு நேரொப்பாக, முன்னைய ஆண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,998,024 ஆகும். இதற்கமைய, ரூபா 2,286,237 சாதகமற்ற வேறுபாடு அவதானிக்கபபட்டது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிசார் கூற்றுக்களின் நிகரக் குறைவு தொடர்பான பகுப்பாய்வுடனான மீளாய்வு கீழே காணப்படுகின்றது.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** | |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| தீர்வையும் வரியும் | 1,532,873 | 1,562.548 | (29,675) | |
| வாடகை | 7,258,609 | 7,293,817 | (35,208) | |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,978,214 | 2,576.500 | 401,714 | |
| சேவைக் கட்டணம் | 5,952,527 | 5,687,961 | 264,566 | |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 1,561,471 | 1.215,329 | 346,142 | |
| ஏனைய வருவாய் | 850,831 | 803,436 | 47,395 | |
| வருவாய்க்கான உதவி | 17.547,833 | 14,354,138 | 3,193,695 | 4.188,629 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| சம்பளங்களும் படிகளும் | 23,144,598 | 21.279,251 | (1,865,347) | |
| பயணச் செலவினம் | 435,940 | 471,803 | 35,863 | |
| வழங்கலும் உபகரணமும் | 2,844.522 | 1,609,458 | (1,235,064) | |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 1,053,587 | 1,428,074 | 374,487 | |
| போக்குவரத்தும் பயன்பாட்டுச் சேவைகளும் | 8,070,430 | 4,558,937 | (3,511,493) | |
| வட்டி, பங்கிலாபம், மிகையூதியக் கொடுப்பனவு | - | 597,968 | 597,968 | |
| உதவிப் பணம், உதவு தொகை நிவாரணத் தொகை | 2,420,494 | 1,549,214 | (871,280) | (6,474,866) |
| | | சாதகமமற்ற வேறுபாடு | | 2,286,237 |

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 தீர்வையும் வரியும்**

ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை தீர்வையும் வரியும் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி அறவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின்போதும் 2001 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அடிப்படையிலேயே தீர்வையும் வரியும் அறவிடப்பட்டிருந்தன.

**2.3.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 59 ஆம் 60 ஆம் விதிகளின் பிரகாரம் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வர்த்தக அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்கு ஆண்டின் ஆரம்பத்தில் கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும் பின்வருமாறு.

| | **ரூபா** |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 1,587,570 |
| முத்திரைக் கட்டணம் | 1,905,688 |
| | 3,493,258 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

(அ) இராணுவ நடவடிக்கைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்டிருந்த 53-5096 இலக்கமுடைய கெப் வண்டி 2011 ஒக்டோபர் 11 அன்று மீண்டும் சபையால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. அதனைப் பொருத்தமானவாறு பழுதுபார்த்துப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 12.5 KVA சுற்றோட்டமுள்ள Mack Power மின் உற்பத்தி இயந்திரம் செயற்பாடற்றிருந்தமையால் பழுதுபார்க்கப்பட்டுப் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் இருந்தது.

(இ) 37-7490 இலக்கமுடைய டிறக்டர் பயன்படுத்தப்படாது சபை வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

**3.2 கழிவுகளை அகற்றுதல்**

தற்போது சபையால் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் அமுலாக்கப்படாதிருந்ததுடன் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சேரிக்கப்படும் கழிவுகள் சபைக்குச் சொந்தமான மஹியங்கன தொடன்வத்த காணியில் ஒழுங்கற்றவாறு அகற்றப்பட்டவண்ணமிருந்தது.

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

2013 ஆம் ஆண்டிற்கான சபையின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| மீண்டுவரும் வருவாய் | 2013 | 2012 | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| வாடகை | 10,273,770 | 7,258,609 | 3,015,161 | 29.3 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,210,000 | 2,978,214 | 768,214 | 34.7 |
| சேவைக் கட்டணம் | 8,156,000 | 5,952,527 | 2,203,473 | 27.0 |
| வருவாய்க்கான உதவி | 15,375,285 | 17,547,833 | 2,172,548 | 14.1 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| பயணச் செலவினம் | 815,000 | 435,940 | 379,060 | 46.5 |
| வழங்கலும் உபகரணங்களும் | 2,530,000 | 2,844,522 | 314,522 | 12.4 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 4,110,000 | 1,053,587 | 3,056,413 | 74.3 |
| போக்குவரத்துத் தொடர்புும் பயன்பாட்டுச் சேவைகளும் | 5,272,000 | 8,070,430 | 2,798,430 | 53.0 |
| வட்டிக் செலுத்துதல், பங்கிலாபம், மிகையூதியம் என்பன | 564,840 | - | 564,840 | 100.0 |
| உதவித் தொகை உதவு தொகை உதவிப்பணம் வழங்குதல் என்பன | - | 2,420,494 | 2,420,494 | 100.0 |

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு